புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# ஊர்ப் பெயர் தோற்றம்

ச.நீலகண்டன்
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை
தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர்- 635601

## முன்னுரை

நாம் ஒவ்வொருவரும் ஒருவரிடம் இருந்து பிரிந்து அடையாளம் காண்பதற்கும் நம்மை மற்றவரிடம் இருந்து தனித்து அடையாளம் காண்பதற்கும் நமக்கு பெரும் துணையாக விளங்குவது நம்முடைய பெயர்களே, அதேப் போன்று நாம் ஒன்றாகக் கூடி வாழும் பகுதியும் மற்றவர்கள் கூடி வாழும் பகுதியையும் தனித்து அடையாளம் காண நமக்குப் பெரும் உதவியாக அமைவது அப்பகுதியின் பெயர்களே. இவ்வாறு நம் முன்னோர்கள் தொடக்கத்தில் எவ்வாறு ஊர்ப்பெயர்களை இட்டு வழங்கியுள்ளனர், என்பதனையும் தற்போது ஊர்ப்பெயர்கள் எவ்வாறு இட்டு வழங்கப்படுகின்றன என்பதனைப் பற்றியும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## மனிதன் தோற்றம்

மனிதன் என்று தோன்றினான் எவ்வாறு தோன்றினான் என்று இன்று வரையிலும் அறிதியிட்டு கூறமுடியாத அளவிற்கே உள்ளது. இன்று வரைக்கும் ஆராய்ச்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனையே புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் தனது நூலில்

> “கற்தோன்றி மன்தோன்றாக் காலத்தே வாளோடு
> முற்றோன்றி மூத்த குடி” [1]

என்னும் பாடலின் மூலம், பூமியில் மலைதோன்றி மண்ணானது தோன்றாதிருந்த அந்தப் பழங்காலத்திலேயே எல்லா மக்கட் குடியினும் முற்படத் தோன்றி, வேளாண்மையுடன் முதிர்ச்சிப் பெற்று வருவதும் எம் தமிழர்களின் குடியாகும் என மனிதனின் தோற்றத்தினைப் பற்றி மிக அழகான முறையில் எடுத்துரைத்துள்ளார். இவ்வாறு மனித இனம் தோன்றியதில் முதலாக விளங்கிய நம் முன்னோர்கள். தாம் வாழ்ந்த நிலத்தின் அடிப்படையில் பெயர்களை இட்டு அழைத்து வந்துள்ளார்கள். இவ்வாறு இட்டு வழங்கியப் பெயர்கள் பெரும்பாலும் காரணப்பெயராகவே இருப்பதைக் காணலாம். இதனை நன்னூலார்

> “இடுகுறி காரண மரபோ டாக்கந்
> தொடர்ந்து தொழிலால காலந்தோன்றா”[2]

எனும் நூற்பாவின் வழி விளக்கிச் செல்கின்றார். பெயர்கள் இடுகுறிப்பெயர்கள் என்றும் காரணப்பெயர்கள் என்றும் பிரித்த அவர் இடுகுறி பெயரினைக் கூறும் போது மரம், விள, பனை என்பன. எந்த ஒரு காரணமும் இன்றி வழி வழியாகப் பெரியோர்களால் இட்டு வழங்கிப் பெயர்களே இடுகுறிப்பெயர்கள். அதுவே ஏதோ ஒரு காரணம் கருதி ஒரு பெயரினை இட்டு வழங்கினால் அதனைக் காரணப்பெயர்கள் என்று கூறுகிறார். சான்றாக அவன், இவன் பறவை போன்ற பெயர்களைக் கூறலாம். அந்த வகையில் ஊர்ப்பெயர்களை உற்று நோக்கும் போது ஏதோ ஒரு காரணத்தாலே பெயர்கள் தோன்றியுள்ளதை அறிய முடிகிறது. இதனை

*அடிப்படையாகக் கொண்டுதான் ஊர்ப்பெயர்கள் பெரும்பாலும் காரணப் பெயராகவே அமைந்துள்ளது என அறியமுடிகிறது.*

*இவ்வாறு தோன்றிய காரணப் பெயர்களும் நிலத்தின் அடிப்படையிலும் மலை, செடி, குன்றுகள் , நில அமைப்புகள் திசை அமைப்புகள் எனப் பல்வேறுவித காரணத்தால் ஊர்ப்பெயர்கள் தோன்றியுள்ளதனைக் காணலாம்.*

*நிலத்தின் அடிப்படையில் தோன்றிய ஊர்ப்பெயர்கள்*

*நிலவகையினை நான்காகப் பிரித்த முதல் தமிழ் நூல் தொல்காப்பியம்.*

*"மாயோன் மேய காடு உறை உலகமும்*
*சேயோன் மேய மைவரை உலகமும்*
*வேந்தன் மேய தீம்புனல் உலகமும்*
*வருணன் மேய பெருமணல் உலகமும்*
*முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச்*
*சொல்லிய முறையான் சொல்லவும் படுமே"* [3]

*என்று தமது நூலில் பூமியினுடைய அமைப்பை உணர்ந்து மலையும் மலைசார்ந்த இடங்களையும் குறிஞ்சி நிலமென்றும், காடும் காடு சார்ந்த நிலப்பகுதியினை முல்லை நிலம் என்றும், வயலும் வயல் சார்ந்த நிலப்பகுதியை மருதம் என்றும், கடலும் கடல் சார்ந்த நிலப்பகுதியை நெய்தல் என்றும் பெயரிட்டழைத்தனர். பின்பு பாலை நிலத்திற்குரிய இலக்கணத்தைச் சிலப்பதிகாரத்தில்தான் முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் தம் இயல்பினை இழந்து விடத்துப் பாலை நிலமாகும் என்று சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் கூறியுள்ளார்*[4]

*குறிஞ்சி நிலம்*

*தமிழ் நாட்டில் வளமைமிக்க மலைகள் பல உண்டு. அவற்றினைச் சார்ந்த சில ஊர்ப்பெயர்கள் தமிழகத்தின் முருகவேள் குறிஞ்சி நிலத்தெய்வமாக விளங்குகின்றார். எந்த மலையும் அவர் தம் சொந்த மலையென்பது தமிழ் நாட்டார் கொள்கை என்று ரா. பி. சேதுப்பிள்ளை தமது நூலில் குறிப்பிடுகிறார். மேலும் அவர் பாண்டிய நாட்டு பழனி மலையும், சோழ நாட்டுச் சுவாமி மலையும், தொண்டை நாட்டுத் தணிகை மலையும் தமிழ் நாட்டில் பிற மலைகளும் முருகன் மலைகளாக விளங்குகின்றது என கூறுகிறார். இவ்வாறு மட்டுமல்லாமல் மலையினை ஒட்டிய ஊர்ப்பெயர்கள் குன்றை அடுத்துள்ள ஊர் குன்றூர் என்றும், குன்றத்தூர், குன்றக்குடி என்றும் பெயர் பெறும், குன்றில் அமைந்துள்ள பாறைகளை வைத்தும் சில ஊர்ப்பெயர்கள் காணப்படுகிறது. பூம்பாறை, சிப்பிப்பாறை, தட்டைப்பாறை, குட்டைப்பாறை முதலிய பெயருடைய ஊர்கள் தமிழ்நாட்டில் உள்ளன.*

*முல்லை நிலம்*

*பண்டைத் தமிழரசர்களாகிய கரிகால் வளவன் காடு கொன்று நாடாக்கினான் என்று பட்டினப்பாலை பாடல் குறிப்பிடுகிறது. இவ்வாறு அழிந்த காடுகளின் தன்மையைச் சில ஊர்ப்பெயர்களால் அறியலாம். அவற்றில் ஆர்க்காடு, ஆலங்காடு, வேற்காடு, களக்காடு மற்றும் திருவாலங்காடு பொன்னேரிக்கருகே உள்ள பழவேற்காடு, இது மட்டுமின்றி காட்டைக் குறிக்கும் வட சொற்களில் வனம்(பிங்கலநிகண்டு), ஆரண்யம் ஆகிய இரண்டும் சில ஊர்ப்பெயர்களில் சேர்ந்து வந்துள்ளது. சான்றாக திண்டிவனம், வேதாரண்யம் இவற்றைக் கூறலாம். முல்லை நிலத்தில் தோன்றிய ஊர்ப்பெயர்கள் பெரும்பாலும் பாடி, பட்டி என்னும் சொற்களைக் கொண்டு அமையும். அந்த வகையில் அமைந்த சில ஊர்ப்பெயர்கள் வேலம்பாடி இது வேல மரங்கள் நிறைந்த காட்டில் எழுந்த காரணத்தால் அது வேலப்பாடி, வேலம், என்னும் ஊர்ப்பெயர்கள் அமைந்தன. அதே போன்று பட்டி என்ற பெயரோடு அமைந்த ஊர்ப் பெயர்கள் கோவிற்பட்டி, ஆண்டிப்பட்டி அரசம்பட்டி என்பனவாகும்.*

*மருதநிலம்*

*பண்டைத் தமிழர் ஆற்றுநீர் பாயும் நிலப் பரப்பைப் பண்படுத்திப் பயிர் செய்து மருத நிலமாக்கினார்கள், ஆற்றங்கரைகளில் சிறந்த ஊர்களையும் அமைத்தனர். சான்றாக உறையூர் என்பது சோழநாட்டின் பழைய தலைநகரமாகும். அது காவிரிக் கரையில் அமைந்திருந்தது. அதே போன்று பாண்டி நாட்டுப் பெரு நதியாகிய வைகையின் கரையில் மதுரை என்னும் ஊர் அமைந்திருந்தது. தொண்டை நாட்டில் சேயாறு என்னும் நதியொன்று உண்டு அதன் கரையில் எழுந்த ஊரும் சேயாறு என்றே பெயர் பெற்றது(சேயாறு செய்யார் என மருவி வழங்கப்படுகின்றது) ஆற்றின் அருகே அமைந்த ஊர் ஆற்றூர் என்றும் இதே போன்று சேலம் நாட்டில் ஆற்றூர் என்பது ஒரு வட்டத்தின் பெயராக வழங்குகின்றது என்று ரா.பி. சேதுப்பிள்ளை கூறுகிறார். ஆற்றின் அணைக்கட்டுகள் அமைந்த பகுதியை சுற்றியும் ஊர்கள் அமைந்தன அவற்றில் சிலப் பெயர்கள் அணைக்கட்டு புதூர், கரடியனை, வெள்ளியனை கண்ணனைப் போன்ற ஊர்ப்பெயர்களைக் கூறலாம். நால்வகை நிலங்களிலும் பொதுவாகத் தமிழ் மக்கள் குடியிருந்து வாழ்ந்தாரேனும் மருத நிலமே சிறப்பாக அமைந்தது. ஆதலால் ஊர் என்னும் பெயர் மருத நிலக்குடியிருப்பைக் குறிக்கும் என்றும் (ஐங்குறுநூறு-88) ''தண்குறை ஊரனை''[5] என்னும்*

*நெய்தல் நிலம்*

*கடற்கரையில் அமைந்த சில ஊர்களின் தன்மையை அவற்றின் பெயர்களே காட்டும். குறிப்பாக கடற்கரையில் உண்டாகும் நகரங்கள் பட்டினம் என்று பெயர் பெறும் சான்றாக்க் காவிரிப்பூம்பட்டினம் என்னும் ஊரினைக் கூறலாம். இவ்வாறு பெரியதாக அமைந்த ஊரினைப் பட்டினம் என்றும் சிறியதாக அமைந்த சிற்றூர்கள் பாக்கம் என்று பெயர் பெறும், சான்றாகக் கோடம்பாக்கம், மீனம்பாக்கம், வில்லிவாக்கம் முதலிய ஊர்கள் நெய்தல் நிலத்தில் எழுந்த ஊர்களேயாகும். இதே போன்றும் குப்பம் என்னும் பெயரும் நெய்தல் நிலப் பெயரே சான்றாகக் காட்டுக்குப்பம், கருங்குடிக்குப்பம், நொச்சிக்குப்பம் இவைகள் நெய்தல் நில மக்களான பரதவர் வாழும் இடங்கள் ஆகும்.*

*பாலை நிலம்*

*நீரும் நிழலுமற்ற பாலை நிலத்தில் கொடுந்தொழில் புரியும் கள்வர்கள் கூடியிருப்பார்கள் என்றும், அன்னார் வணங்கும் தெய்வம் கொற்றவை என்றும் தமிழ் இலக்கியம் கூறும். பாலை என்னும் பெயருடைய சில ஊர்கள் உண்டு சான்றாகப் பெரும்பாலை (கொங்கு நாட்டில் உள்ளது). சிதம்பரத்திற்கு அருகே திருக்கழிப்பாலை உள்ளது, தொண்டை நாட்டில் பாலையூர் என்னும் ஊரும் உள்ளது.*

*நாடும் மன்னரும்*

*நிலத்தினை அடுத்து அதனை ஆட்சி செய்த அரசர்களின் பெயராலும் கீழ் ஆட்சி செய்த குறு நில மன்னர்களின் பெயராலும் பட்டத்து அரசியர் பெயராலும் நாடுகளுக்கும் ஊர்களுக்கும் பெயர்கள் இடப்பட்டது. அந்த வகையில் தமிழ் நட்டினை ஆட்சி செயத மன்னர்கள் மூவர் சேரர், சோழர், பாண்டியர் என்ற பெயர்கள் தமிழிலக்கியத்தில் மிகத் தொன்மை வாய்ந்தவர்கள். இவர்களின் பெயரோடு நாடு இணைத்து சேர நாடு, சோழநாடு, பாண்டியநாடு என்று அழைக்கும் வகையில் தொன்மை வாய்ந்தவர்களாக தமிழகத்தில் விளங்கினர். இவர்கள் ஆட்சி செய்த பகுதியில் இவர்களின் நினைவாக ஊர்களும் உருவாக்கப்பட்டன.*

*சேரநாடு*

*மேற்குத் தொடர்ச்சி மலை, இந்நாட்டை சோழ பாண்டிய நாடுகளிடமிருந்து பிரித்து காண்பிக்கிறது. இந்நாட்டில் உள்ள பெரியாறு கடலோடு கலக்கும் இடத்தில் வஞ்சி நகரம் இருந்துள்ளதாம், அதுவே சேர நாட்டின் தலைநகர். இந்நாட்டினை ஆண்ட சேர அரசர்கள் அவர்களின் கீழ் ஆட்சி செய்த சி|ற்றரசர்கள் குறிப்பாக ''குடக்கோ'' என்னும் அரசன் ஆண்ட பகுதியை குடநாடு என்று பெயரிட்டு அழைத்துள்ளனர். இதனை அடுத்து ''குட்டுவன்'' என்னும் அரசன் ஆண்ட பகுதியைக் ''குட்டநாடு'' என பெயரிட்டு அழைத்துள்ளனர் என்று ரா. ராஜமாணிக்கனார் குறிப்பிடுகிறார்[6]. இந்நாடு தற்போது கேரளம் ஆகும்.*

சோழநாடு

சோழர்கள் பற்றிக் கூறும்போது சங்ககால சோழர்கள், பிற்காலச் சோழர்கள் என்று இரண்டு பிரிவுகளாகக் கூறுவர். இச்சோழர்கள் ஆட்சி செய்த பகுதியைப் பிற்காலத்தில் எழுதப்பட்ட சோழமண்டல சதகம்

"கடல் கிழக்கு தெற்குக் கரைபுரள வெள்ளாறு
குடதிசையில் கோட்டைக் கரையாம் வடதிசையில்
ஏணாட்டுப் பெண்ணை இருபத்து நாற்காதம்
சோணாட்டுக்கு எல்லையெனச் சொல் "

என்னும் பாடல் மூலம் சோழ நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுகிறது. அதாவது சோழநாட்டின் கிழக்கே வங்காள விரிகுடாவும், தெற்குக்கரையில் வெள்ளாறு, மேற்கு கோட்டைக்கரை என்ற ஊர், வடக்கில் ஏணாட்டு பெண்ணை ஆகியன சோழநாட்டின் எல்லைகளாக வகுக்கப்பட்டுள்ளது. ஆனால், பிற்கால சோழர் காலத்தில் இவற்றையெல்லம் கடந்து சோழ நாடு விரிந்து காணப்பட்டது என கூறுகின்றனர். இவர்கள் ஆட்சி காலத்தில் பல ஊர்களை உருவாக்கி அதற்கு தன்னுடைய பெயர் மற்றும் சிற்றரசர்கள் பெயரினை இட்டு வழங்கியுள்ளனர். சான்றாகச் சில ஊர்ப்பெயர்கள் குறித்துச் சுருக்கமாகக் காண்போம்.

கங்கைகொண்ட சோழபுரம்

இராஜேந்திரன் என்னும் சோழ மன்னனுக்கு கங்கைகொண்ட சோழன் என்ற பட்டப்பெயர் பெற்றிருந்தான். அப்பெயராலேயே ஒர் நகரினை உருவாக்க நினைத்து அவ்வாரே அதனை உருவாக்கி அந்நகரில் ஒரு பெரிய கோவிலைக் கட்டினான் மற்றும் பெரிய ஏரி ஒன்றினையும் உருவாக்கி கங்கையாற்றிலிருந்து எடுத்து வந்த நீரினை அந்த ஏரியில் ஊற்றி "சோழகங்கம்" எனப் பெயரிட்டான். இவ்வாறு சிறப்பு மிக்க நகரமாக "கங்கைகொண்ட சோழபுரம்" அன்று விளங்கியது

வீராணம்

பராந்தகன் பாண்டிய மன்னனை இருமுறை வென்று மதுரையைக் கைபற்றினான். இவ்வரசனது விருது பெயர்களில் ஒன்று வீர நாராயணன் என்பதாகும். அப்பெயரின் நினைவாக இராணிப்பேட்டை மாவட்டத்தில் இரண்டு ஊர் பெயர்கள் உண்டு ஒன்று மேல்வீராணம் மற்றொன்று கீழ்வீராணம், அதேபோன்று திருவண்ணமலை மாவட்டத்தில் வீராணம் என்ற ஊரும் உண்டு என்று ரா.பி. சேதுப்பிள்ளைத் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சோழனூர்

அரக்கோணம் வட்டத்தில் சோகனூர் என்ற ஊர் ஒன்று உள்ளது. அங்குச் சென்று அவ்வூரின் வரலாற்றினைக் கேட்டறிந்த போது அவ்வூரினை முன்காலத்தில் சோழர்களால் ஆட்சி செய்யப்பட்ட ஊர் என்றும் அதன் நினைவாக சோழனூர் என்று அழைக்கப்பட்டது பின்பு இப்பெயர் மருவி தற்போது சோகனூர் என அழைக்கப்படுவதாகக் கூறினர்.

சிற்றரசர்

சோழ அரசர்கள் கீழ்ப் பலச் சிற்றரசர்கள் இருந்து சோழநாட்டினை வலுப்படுத்தும் விதமாக ஆட்சி செய்து வந்துள்ளனர். அவர்களின் பெயராலும் சில ஊர்ப்பெயர்கள் இட்டு வழங்கி வந்துள்ளனர். குறிப்பாக பழுவேட்டையர், இலாடராயர், வைதும்பராயர் என்ற சிற்றரசர்களை குறிப்பிடலாம்.

பழுவேட்டையர்

இச்சிற்றரசர் சோழ நாட்டின் ஒருபகுதியான கீழ்ப்பழுவூர், மேல்பழுவூர் எனும் ஊர்களைச் சேர்ந்த நிலபப்குதியை ஆண்டு வந்துள்ளனர். அவர்களின் நினைவாக அவ்வூர்காளுக்கு அவர்களின் பெயராலே அழைக்கப்படுவதைக் காணமுடிகிறது. பழுவேட்டையர் ஆண்டதால் பழுவூர் என்னும் பெயரை இவ்வூர் பெற்றுள்ளது.

இலாடராயர்

வட ஆர்க்காடு கோட்டத்தை இலாடராயர் என்னும் மரபினர் ஆண்டு வந்துள்ளனர். அதன் நினைவாக (தற்போது இராணிப்பேட்டை மாவட்டத்தில் வேலூர் மாவட்டத்தில் இருந்து பிரிக்கப்பட்டது) "இலாடாவரம்" என்னும் ஊர் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

பாண்டிய நாடு

பாண்டிய அரசர்களுள் மிகச்சிறந்து விளங்கிய வீரபாண்டியன் பெயரால் அமைந்த ஊர் நெல்லை நாட்டு நாங்குனேரி வட்டத்தில் வீரபாண்டியன் நல்லூர் என்று முன்காலத்தில் பெயர்பெற்று இருந்த ஊர் தற்பொழுது வீரபாண்டியம் என்று வழங்கப்படுவதாகக் கூறுகின்றனர். இதேப் போன்று மதுரையில் உள்ள பெரியகுளம் வட்டத்தில் வீரபாண்டியநல்லூர் ஒன்றும் உள்ளது. மேலும் அழகிய பாண்டியன் என்பவன் ஆய் என்னும் சிற்றரசனை வென்று அவனுக்குச் சொந்தமான மலையினை கைபற்றினான், அதன் வெற்றியின் சிறப்பினை உறுதிபடுத்தும் விதமாக அம்மலையின் அருகில் உள்ள ஊருக்குப் பாண்டியபுரம் எனப் பெயரிட்டான் என்று ரா.பி.சேதுப்பிள்ளை கூறுகிறார்[7].

தற்கால ஊர்ப்பெயர்கள்

முற்காலத்தில் இட்டு வழங்கிய பெயர்கள் ஏதோ ஒரு வரலாற்றினைக் கூறும் விதமாகவோ, அல்லது ஏதோ ஒரு காரணத்தை உணர்த்தும் விதமாக அமைந்திருந்து. ஆனால் தற்போது உருவாகும் ஊர்ப்பெயர்களைக் கேட்டறியும்போது வேடிக்கையாக உள்ளது. அக்காலத்தில் ஒரு ஊர் என்றால் ஏரி அமைக்கப்பட்டிருக்கும், ஊரின் நடுவில் கோவில் கட்டப்பட்டிருக்கும்,. ஆனால் தற்பொழுது அவ்வாறு இல்லாமல் விளை நிலங்களை எல்லம் வீட்டு மனைகளாக்கி அதனைப் பலருக்கு விற்று அதில் இலாபம் பெறும் வியபாரிகளின் பெயரோ அல்லது அவர்களின் குடுப்பத்தரின் பெயர்களை வைத்து ஊரின் பெயரினை உருவாக்குகின்றனர். அந்த வகையில் இன்று நாடு முழுவதும் பல நகரங்கள் புதியதாக உருவாக்கப்பட்டு மக்களின் மனதினை கவரும் விதமாக வியாபார நோக்குடன் பல ஊர்கள் உருவாக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு புதிய ஊர்கள் உருவாகிவருவதை நம்மால் கணக்கிட இயலாத அளவில் புதிய ஊர்கள் உருவாகி வருகின்றது என்பதனைக் காணமுடிகின்றது.

முடிவுரை

ஊர்ப்பெயர்கள் முன்காலத்தில் எவ்வாறு எதன் அடிப்படையில் இட்டு வழங்கப்பட்டு வந்துள்ளது அதன் தோற்றம் என்ன அவ்வாறு இடப்பட காரணம் என்ன என்றும் ஆராய்ந்து அவ்வாறு வழங்கப்பட்ட ஊர்ப்பெயர்கள் சிலவற்றை எடுத்து கூறியும் அப்பெயர் தோன்றிய காரணத்தை விளக்கியும், தற்போது இடப்படும் ஊர்ப்பெயர்களின் தோற்றங்கள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

குறிப்புகள்

1. புறப்பொருள் பெண்பாமாலை- (குடிநிலை) நூற்-35.
2. நன்னூல் சொல்லதிகாரம் – நூற்-275,
3. தொல்காப்பியம் அகத்திணையியல் – நூற்-5,
4. சிலப்பதிகாரம் மதுரைக் காண்டம் – பாடல்-65,
5. ஐங்குறுநூறு பாடல் – 88,
6. இராஜமாணிக்கனார்.மா, தமிழக வரலாறும் பண்பாடும் ப.42,
7. சேதுப்பிள்ளை.ரா.பி, தமிழக ஊரும் பேரும் ப.61.

துணை நின்ற நூல்கள்

1. ஊரும் பேரும், சேதுப்பிள்ளை இரா.பி. தமிழகம் சீதை பதிப்பகம், சென்னை – 600 005. மூன்றாம் பதிப்பகம் – 2015
2. தமிழக வரலாறும் பண்பாடும், இராஜமாணிக்கனார். – 2016முதல் பதிப்பு, மா, வதனி வெளியீடு, 19/9 இராஜா தெரு, தியாகராயர் நகர், சென்னை – 600 017.

3. *நன்னூல் ஆறுமுக நாவலர் காண்டிகையுரை, சொல்லதிகாரம்      புலியூர்க் கேசிகன் – 2009 (முதல் பதிப்பு),  பாரிநிலையம், 184/88 பிராடுவே, சென்னை – 600 108.*
4. *புறப்பொருள் வெண்பாமாலை, புலியூர்க் கேசிகன், 2009 (முதல் பதிப்பு), பாரிநிலையம், 184/88 பிராடுவே, சென்னை – 600 108.*
5. *மகேந்திரவர்மன், மயிலை சீனி. வேங்கடசாமி, 2013 (முதல் பதிப்பு)  பூம்புகார் பதிப்பகம், சென்னை- 600 108.*

*********   *********   **********   *********   *********   **********   **********   **********